FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

## 2021 ஜூலை

தொகுதி 07


ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன மீதான அச்சுறுத்தல்


ஊடகவியலாளர் கோகிலதாசனை கைதுசெய்தமை தொடர்பில் ,மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை ஆரம்பித்தமை


போராட்டகாரர்கள் பலரை கைது செய்தமை

ஊடக சுதந்திரம் குறித்து ஜூலை மாதத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் மற்றும் முந்தைய நிகழ்வுகளின் பின்தொடர்வுகள் தொடர்பில் சுருக்கமான முறையில் கண்காணித்து இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த அறிக்கையானது ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் பேச்சு உரிமை மற்றும் கருத்துரிமை தொடர்பான பிரச்சினைகளிலும் கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதிகூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 14 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் ஜூலை 2021 அறிக்கையில் உள்வாங்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதில் 11 நிகழ்வுகள் ஜூலை மாதத்தில் நடைபெற்ற புதிய சம்பவங்களாகும் மீதி 03 நிகழ்வுகள் முன்னைய மாதங்களில் நிகழ்ந்த சம்பவங்களின் பின்தொடர்ச்சி ஆகும். ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்கான ஒரு கருவியாக தனிமைப்படுத்தல் சட்டம் பயன்படுத்தப்பட்ட பல நிகழ்வுகள் ஜூலை முதல் இரண்டு வாரங்களில் பதிவாகின. இந்த சம்பவங்களானது கருத்து சுதந்திரத்திற்கு எதிராக நடைபெறும் புதிய போக்குகளாக கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஜூலை மாதத்தில் உள்நாட்டு மற்றும் சர்வதேச அளவில் வெவ்வேறு தரப்பினர்கள், இலங்கையில் ஊடக சுதந்திரத்தை ஆதரித்து குரல்கொடுக்கும் ஒரு போக்கு காணப்படுகின்றமை கவனிக்கத்தக்கதாகும்

சுதந்திர ஊடக இயக்கம் அங்கம் வகிக்கும் ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு, இரு சம்பவங்கள் குறித்து பொலிஸ்மா அதிபருக்கு திறந்த கடிதங்களை அனுப்பியது.மேலும் கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்க தனிமைப்படுத்தல் சட்டங்களை ஆயுதமாக தவறான முறையில் பயன்படுத்துவதற்கு எதிராக ஊடக அமைப்புக்களின் கூட்டமைப்பு செய்தியாளர் சந்திப்பு ஒன்றும் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஜூலை மாதத்தில் இடம்பெற்ற புதிய நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள்:

1. ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன முகப்புத்தகத்தில் பகிரப்பட்ட செய்தி ஒன்று தொடர்பில் அவரை சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் மறைமுகமாக அச்சுறுத்தும் வகையில் பதிலளித்தமை சம்பவம்.
2. பொதுக் கூட்டங்கள் மற்றும் போராட்டங்கள் போன்ற நடவடிக்கைகள் மறு அறிவித்தல் வரை நடத்தப்படக் கூடாது என்ற சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் வேண்டுகோளின் பேரில் பொலிஸ் தலைமையகம் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டமை மற்றும் பல மக்கள் போராட்டங்களின் போது தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் பல சமூக ஆர்வலர்கள் கைது செய்யப்பட்டமை.

3. ஜூலை 8 ஆம் திகதி பாராளுமன்ற சுற்றுவட்ட பாதையில் நடைபெற்ற போராட்டத்தை அறிக்கையிடச் சென்ற ஊடகவியலார்களை பொலிசார் பல சமயங்களில் அவர்களின் பணியை மேற்கொள்ளவிடாமல் தடுத்தமை .

4. சர்வதேச ஊடகவியலாளர்களின் கூட்டமைப்பு (IFJ) ஊடக நிறுவனங்களில் நடைபெறும் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியமை.

5. ஊடக சுதந்திரம் குறித்த சர்வதேச அமைப்பான எல்லைகளற்ற நிருபர்கள்அமைப்பு "பத்திரிகைசுதந்திரத்தைவேட்டையாடுபவர்கள்" 37 பேர்கள் கொண்ட பட்டியலில் இலங்கை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவையும் இணைத்துக்கொண்டுள்ளது.

6. சிரச ஊடக நிறுவனத்தின் தொலைக்காட்சி உரிமத்தை மீளப்பெறுவதன் மூலம் அந் நிறுவனத்தை மூடிவிடுவதற்கு அரசு இரகசிய திட்டமொன்றைத் தீட்டி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்து.

7. மட்டு ஊடக அமையத்தின் செயலாளர் செல்வகுமார் நிலாந்தன் மட்டக்களப்பு கல்லடி புலனாய்வு பிரிவுக்கு அழைத்து விசாரணை செய்யப்பட்டதுடன் அவரின் தனிப்பட்ட தகவல்களை பெற்றுத்தருமாறு வற்புறுத்தியமை.

8. மனித உரிமைகள் மீறல்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட முந்தைய ஆணைக்குழு அல்லது ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை பரிசீலனை செய்து அறிக்கை அளிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையின் மூலம் பயங்கரவாத தடுப்பு சட்டத்தை ரத்து செய்யக்கூடாது" என்று பரிந்துரைத்துள்ளமை.

9. நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான தண்டனை ஒழுங்குபடுத்துவதில் அல்லது தண்டனை விதிக்கப்படுவதில் சில நீதிமன்றங்களின் அதிகாரங்களை வரையறுக்கவும் மற்றும் அது தொடர்பான நீதிமன்ற நடைமுறைகளை ஒழுங்குபடுத்தும் நோக்கில் சட்டவரைவொன்றை சமர்ப்பித்தல், அந்த சட்டவரைவானது பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் தனிப்பட்ட பிரேரணையாகும்.

10. ஊடகவியலாளர்கள் தகவல் அறிக்கையிடுவதில் மட்டும் நின்றுவிடாமல், பாரதூரமான சம்பவங்கள் குறித்த தகவல்களை சம்பந்தப்பட்ட சட்டப் பிரிவுகளுக்கு வழங்க வேண்டும் என்று வெகுசன ஊடக அமைச்சரினால் தெரிவிக்கப்பட்ட கருத்து.

11. பேஸ்புக்கில் பதிவிட்டதற்காக கைது செய்யப்பட்ட பத்திரிகையாளர் கோகில தாசனை ஏழு மாதங்களுக்கும் மேலாக தடுப்புக் காவலில் வைத்திருப்பது குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) விசாரணையைத் தொடங்கியமை.

12. எழுத்தாளர் சக்திக சத்குமார தனது முகநூலில் வெளியிட்ட சிறுகதையின் காரணமாக கைது செய்யப்பட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு மீதான விசாரணை ஆரம்பிக்கப்பட்டமை.

13. மனித உரிமைகள் வழக்கறிஞர் ஹிஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் தமிழ் மொழி ஆசிரியரும் கவிஞருமான அஹ்னாப் ஜசீமை கைது செய்து தன்னிச்சையாக தடுத்து வைத்திருப்பதை கண்டித்து இலங்கை பல்கலைக்கழக சமூகத்தின் 96 உறுப்பினர்கள் கூட்டு அறிக்கை வெளியிட்டுள்ளமை.

14. 1983 ஜூலையில் வெலிக்கடை சிறைச்சாலையில் 53 தமிழ் கைதிகள் கொல்லப்பட்டது குறித்து எழுதப்பட்ட கட்டுரை தொடர்பாக காவல்துறை கணினி குற்றப்பிரிவு ஊடகவியலாளர் நந்தன வீரரத்னவிடம் விசாரணை நடத்தியமை.

**அட்டவணை எண்: 01**

**அறிக்கையிடப்பட்ட மொத்த நிகழ்வுகளின் எண்ணிக்கை – 2021 ஜூலை மாதம்**

| இலக்கம் | உள்ளடக்கப்பட்டுள்ள பகுதிகூறுகள் | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 04 |
| 02 | ஊடகத்தின் சுயாதீனத்துவம் | 01 |
| 03 | சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 06 |
| 04 | கட்டமைப்புரீதியான விதிமுறைகள் | 03 |
| | **மொத்தம்** | **14** |

## ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல்சார் மற்றும் மனரீதியாக ஒர்முகப்படுத்தி சுயாதீனமாக தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர சூழல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. இந்த அடிப்படை சுதந்திரத்தை சவாலுக்கு உட்படுத்தும் பல நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் ஜூலை மாதத்தில் கண்காணிக்கபட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.அமைதியான முறையில் ஒன்றுக்கூடல், எதிர்ப்பை தெரிவித்தல் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான சுதந்திரம் கருத்துச் சுதந்திரத்தின் கீழ் உள்ளடங்கும் உப தலைப்புகளாகும். இந்த அடிப்படை சுதந்திரம் மீறப்பட்ட 04 சந்தர்ப்பங்கள் ஜூலை மாதத்தில் கண்காணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.**

**அட்டவணை: 02**

**2021 ஜூலை மாதம் : ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் 04**

| இலக்கம் | நிகழ்வு மற்றும் சம்பவம் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | அச்சுறுத்தல் நடவடிக்கை | 01 |
| 02 | பயண மற்றும் தகவல் அணுகலுக்கான உரிமையை தடுத்தல் | 01 |
| 03 | உளவியல் ரீதியான துஷ்பிரயோகம் | 02 |
| | **மொத்தம்** | **04** |

1. **ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன முகப்புத்தகத்தில் பகிரப்பட்ட செய்தி ஒன்று தொடர்பில் அவரை சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் மறைமுகமாக அச்சுறுத்தும் வகையில் பதிலளித்தமை சம்பவம்.**

முகப்புத்தக சமூக ஊடக வாயிலாக ஜூலை 01 ஆம் திகதி பகிர்ந்த செய்தியொன்று தொடர்பில், மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மறைமுகமான முறையில் அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

(குறித்த செய்தியை கொண்ட முகப்புத்தக பதிவு - https://m.facebook.com/story.php?story_fbid=4804876112874609&id=100000568041748)

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதிவிட்டதாவது, ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்த்தன போலிச் செய்திகளை வெளியிட்டதாகவும், அதற்காக இயற்கை அவரைத் தண்டிக்கும் என்றும், பிரபாகரனுக்கும் மற்ற குற்றவாளிகளுக்கும் என்ன நடந்தது என்பதை ஆராயும்படி வலியுறுத்தியுள்ளார். அவர் எழுதிய போலிச் செய்தி என்ன என்று ஊடகவியலாளர் கேட்ட போதிலும், தேசபந்து தென்னகோன் உறுதியான பதில்கள் ஏதும் அளிக்கவில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் அவர் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் பற்றிய ஒரு கட்டுரையை குறிப்பிடுகிறார். www.medialk.com என்ற இணையதளத்தின் ஆசிரியராக பணிபுரியும் தரிந்து ஜயவர்தன, "உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு சம்பள உயர்வு - அரசியல் பழிவாங்கும் பொலிஸ் பட்டியலுக்கு அமைச்சரவை ஒப்புதல்" என்ற தலைப்பிட்டு www.medialk.com வலைத்தளத்தில் ஒரு கட்டுரை பிரசுரிக்கப்பட்டுள்ளது. அந்த கட்டுரையில் "உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வெளிப்பபடையான முறையில் விசாரணை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மற்றும் பொலிஸ் சிறப்பு விசாரணை பிரிவு பரிந்துரைக்கப்பட்ட மேல் மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் அவர்களுக்கும் சம்பள உயர்வுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது" என குறிப்பிடப்பட்டிருந்தது. 2021 ஜுன் 29 திகதி அன்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தரிந்து ஜயவர்தன எழுப்பிய கேள்விக்கு வெகுசன ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல அளித்த பதிலே செய்தியின் ஆதாரமாக காணப்படுகின்றது. (குறித்த செய்தி பதிவு https://medialk.com/archives/5653)

ஜூலை 2 ஆம் திகதி அன்று பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவுக்கு சுதந்திர ஊடக இயக்கம் உள்ளிட்ட ஊடக அமைப்புக்களின் கூட்டமைப்பு, எழுதிய கடிதத்தில், இந்த சம்பவம் குறித்து முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், ஊடகவியலாளரின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டன.

2. **ஜூலை 8 ஆம் திகதி பாராளுமன்ற சுற்றுவட்ட பாதையில் நடைபெற்ற போராட்டத்தை அறிக்கையிடச் சென்ற ஊடகவியலார்களை பொலிசார் பல சமயங்களில் அவர்களின் பணியை மேற்கொள்ளவிடாமல் தடுத்தமை.**

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டவரைவுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜூலை 8 ஆம் திகதி பாராளுமன்ற சுற்றுவட்ட பாதை அருகே நடந்த போராட்டத்தை அறிக்கையிடச் சென்ற ஊடகவியலாளர்களை பல சமயங்களில் காவல்துறையினர் தமது பணியை செய்யவிடாது தடுத்து நிறுத்தப்பட்டதாக lankaviews இணையதளம் தெரிவித்துள்ளது.

ஒரு தருணத்தில், பொலிஸ் பெண் அதிகாரி ஒருவர் வீடியோ கேமராவை தள்ளிவிடுவதன் மூலம் அறிக்கையிடலை தடுப்பதற்கு முயற்சி செய்த வேலையில் நிழற்படக் கருவியாளர் கேமரா கீழே விழாமல் விரைவாக செயற்பட்டு தடுத்து நிறுத்தியுள்ளார். இது தொடர்பில் குறித்த பெண் பொலிஸ் அதிகாரியிடம் வினவியபோது, அவர் பேருந்து ஒன்றில் ஏறி அங்கிருந்து சென்றுவிட்டதாக அந்த செய்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கிருந்த உயர் காவல்துறை அதிகாரிகளிடம் இந்தச் சம்பவம் குறித்து செய்தியாளர்கள் வினவியபோது, அவர்கள் எந்த விதமான நியாயமான தலையீட்டையும் மேற்கொள்ளவில்லை என்றும், இந்த தள்ளிவிட்ட சம்பவம் வேண்டுமென்றே செய்யப்பட்ட செயல் அல்லாமல் மாறாக அது தற்செயலாக நடைபெற்றதாக இருக்கலாம் என அங்கிருந்த அதிகாரியொருவர் குறிப்பிட்டதாக அந்த அறிக்கை கூறுகின்றது. (ஆதாரம்: https://bit.ly/3dTigbd) இந்த தகவலை உறுதிப்படுத்தும் காணொளிப்பதிவு Voicetube.lk யூடியுப் சேனலில் வெளியிடப்பட்டது (https://youtu.be/yiFZQ4eWSCU) எனினும், சம்பவத்துடன் தொடர்புடைய ஊடகவியலாளர்கள் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்ததாக எந்தவொரு செய்தியும் அறியகிடைக்கவில்லை.

3. **மட்டு ஊடக அமையத்தின் செயலாளர் செல்வகுமார் நிலாந்தன் மட்டக்களப்பு கல்லடி புலனாய்வு பிரிவுக்கு அழைத்து விசாரணை செய்யப்பட்டதுடன் அவரின் தனிப்பட்ட தகவல்களை பெற்றுத்தருமாறு வற்புறுத்தியமை.**

மட்டக்களப்பு தமிழ் பத்திரிகையாளர்கள் சங்கத்தின் செயலாளராக பதவிவகிக்கும் நிலந்தன் ஜூலை மாதம் 12 ஆம் திகதி கல்லடி பயங்கரவாத தடுப்பு விசாரணை பிரிவு டிஐடி (TID) க்கு வரவழைக்கப்பட்டார். அங்கு மூன்று மணி நேரம் நீடித்த தீவிர விசாரணையைத் தொடர்ந்து அவரிடம் இருந்து அறிக்கையும் பெறப்பட்டது. விசாரனை மேற்கொள்வதற்கான சரியான காரணம் விளக்கப்படவில்லை என்பதுடன் அவரது முழு செயல்பாடுகள் தொடர்பிலும் விசாரிக்கப்பட்டு அவரது வங்கிக் கணக்குகளின் விவரங்கள் கோரப்பட்டுள்ளதுடன் மேலும் மின்னஞ்சல்கள் மற்றும் சமூக ஊடக தொடர்புகளின் கடவுச்சொற்களை பெற்றுத்தருமாறு வற்புறுத்தியும் உள்ளனர். பெருமளவு விசாரிக்கப்பட்ட விடயமாவது

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் (LTTE) ஏதேனும் தொடர்பு உள்ளதா என்பதே ஆகும். தேவைப்பட்டால் மீண்டும் விசாரணைக்கு அழைப்பு விடுப்பதாக அவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆதாரம்: https://bit.ly/3s1GhT7)

பொலிஸ் மா அதிபருக்கு எழுதிய கடிதத்தில், ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு குறிப்பிட்டதாவது , ஒரு ஊடகவியலாளருக்கு எதிராக முறையீடு செய்யப்பட்டு அல்லது வேறு காரணங்களுக்காக விசாரிக்கப்படுகிறார் என்றால் அவரின் தனிப்பட்ட தகவலை வழங்குமாறு அழுத்தம் கொடுப்பது சட்டபூர்வமானது அல்ல என்பதை குறித்த அக்கடிதம் சுட்டிக்காட்டுகின்றது. மேலும், இந்த சம்பவம் குறித்து உடனடி விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றும், இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் பொலிஸ் மா அதிபரை இக்கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

4. **1983 ஜூலையில் வெலிக்கடை சிறைச்சாலையில் 53 தமிழ் கைதிகள் கொல்லப்பட்டது குறித்து எழுதப்பட்ட கட்டுரை தொடர்பாக காவல்துறை கணினி குற்றப்பிரிவு, ஊடகவியலாளர் நந்தன வீரரத்னவிடம் விசாரணை நடத்தியமை.**

சுயாதீன ஊடகவியலாளர் நந்தன வீரரத்ன, ஜூலை 30 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு குற்றப்புலனாய்வு பிரிவின் கீழ் உள்ள கணணி பிரிவுக்கு ஆஜராகுமாறு பொலிசாரால் 27 ஆம் திகதி மாலை அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அழைப்பு ஆணை அடங்கிய துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி எண்ணுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு விசாரணை என்ன என்று கேட்டபோது, அழைப்புக்கு பதிலளித்த அதிகாரி எவ்விதமான தகவலையும் கொடுக்க மறுத்துவிட்டார். அழைப்பாணைக்கு அமைய ஜூலை 30 ஆம் திகதி குற்றப்புலனாய்வு பிரிவில் ஆஜராகிய போது,1983 ஜூலை மாதம் 25 மற்றும் 27 ஆம் திகதிகளில் வெலிகடை சிறைச்சாலையில் 53 தமிழ் சிறைக்கைதிகள் கொல்லப்பட்டது தொடர்பில் விசாரணை மேற்கொள்ள வேண்டி பிரசுரித்த அறிக்கையின் பிரதி மற்றும் அங்கு சில சந்தேகநபர்களின் பெயர் குறிப்பிடப்பட்டு எழுதப்பட்ட குறிப்பு ஊடகவியலாளருக்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன் குறித்த கட்டுரைகள் தன்னால் எழுதப்பட்டது என உறுதிப்படுத்தும் வகையில் கையெழுத்து பெறப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். ஊடகவியலாளர் அங்கு தெரிந்து கொண்ட விடயங்களுக்கு அமைய, குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அந்த அறிக்கையை முறையீடு செய்தது அந்த காலப்பகுதியில் வெலிக்கடை சிறைச்சாலையில் சிறை தண்டனை அனுபவித்து வந்த சேபால ஏக்கநாயக உள்ளிட்ட குழாம் ஆகும். நந்தன வீரரத்ன தனது வாக்குமூலத்தின் உள்ளடக்கம் குறித்து தனது முகநூல் கணக்கில் ஒரு குறிப்பை வெளியிட்டுள்ளார். அங்கு குறிப்பிட்டுள்ளதாவது, "1998 இல், பிபிசி உலக சேவைக்காக பணிபுரிந்தபோது, இந்தக் குற்றத்தை நேரில் கண்ட சாட்சிகளைத் தொகுத்தேன். அதன் சாட்சிகளில் ஒருவரான ஞானசேகரன், இந்தப் படுகொலையின் பிரதான காரணகருத்தாவாக சேபால ஏகநாயக்க மற்றும் அவரது சகாக்களை பெயரிட்டார். பேராசிரியர் ராஜன் ஹூல் எழுதிய புத்தகங்களிலும் இந்த குற்றத் தலைவர்களின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த குற்றவாளிகளிடமிருந்து வெலிக்கடையில் கொல்லப்பட்ட கைதிகளின் உடல்களை மீட்க சென்ற அப்போதைய கமாண்டோ படைப்பிரிவின் கர்னல் சுனில் பீரிஸ் இந்த குற்றத் தலைவர்களின் மிருகத்தனமான நடத்தை பற்றி அறிக்கையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே, இந்த கொடூரமான குற்றத்தின் குற்றவாளிகள் பெயரிடப்படும் வரை நாங்கள் இதைப் பற்றி எழுதுவதை நிறுத்த மாட்டோம். இந்த கொலை குறித்த ஆவணப்படமொன்றை உருவாக்கும் நோக்கில் நான் சுமார் 5 ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து வருகிறேன். நான் அதை தொடர்ந்து செய்வேன்.

(ஆதாரம்: https://www.facebook.com/650281772/posts/10158867902471773/)

## ஊடக சுயாதீனத்துவம்

**ஊடக சுயாதீனத்துவம் என்பது ஊடக சுதந்திரத்தின் ஒரு முக்கிய அங்கமாகும். ஊடக நிறுவனங்களுக்குள் ஊடகவியலாளர்களின் சுயாதீனத்துவம், ஆசிரியர்சபைசுயாதீனத்துவம், அரசியல்வாதிகள், வணிகரீதியான பலம்வாய்ந்தவர்கள் மற்றும் மதத் தலைவர்கள்களிடம் இருந்து ஊடக சுயாதீனத்துவம், வியாபார விளம்பரங்கள் பெற்றுத்தருதல் அல்லது பெற்றுத்தராமல் இருப்பதன் ஊடாக ஊடக சுயாதீனத்துவத்தை தாக்கத்திற்கு உள்ளாக்குதல்,இணைய வசதி அல்லது உரிமம் அளிப்பவரின் ஊடாக ஊடக உள்ளடக்கங்களில் தாக்கத்தை மேற்கொள்ள முயற்சித்தல்கள் போன்ற விடயங்கள் ஊடக சுயாதீனத்துவம் என்ற பகுதிக்கூறுக்குள் உள்ளடங்கும்.**

**சிரச ஊடக நிறுவனத்தின் தொலைக்காட்சி உரிமம் இடைநிறுத்தம் தொடர்பாக அறிக்கையிடப்பட்ட விடயமானது இரு பகுதிக்கூறுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.**

**அட்டவணை 03 : 2021 ஜூலை : ஊடக சுயாதீனத்துவம்– நிகழ்வு – 1**

| இலக்கம் | நிகழ்வு மற்றும் சம்பவம் | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | அரசியல்வாதிகளின் தாக்கத்தினால் ஊடகம் மீதான சுயாதீனத்துவம் | 01 |
| | **மொத்தம்** | **01** |

1. **சிரச ஊடக நிறுவனத்தின் தொலைக்காட்சி உரிமத்தை மீளப்பெறுவதன் மூலம் அந் நிறுவனத்தை மூடிவிடுவதற்கு அரசு இரகசிய திட்டமொன்றைத் தீட்டி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்து.**

இலங்கையில் பிரபல மகாராஜா நிறுவனத்துக்குச் சொந்தமான சிரச ஊடக நிறுவனத்தின் தொலைக்காட்சி உரிமத்தை மீளப்பெறுவதன் மூலம் அந் நிறுவனத்தை மூடிவிடுவதற்கு அரசு இரகசிய திட்டமொன்றைத் தீட்டி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா ஜூலை 7 ஆம் திகதி சபையில் கேள்வி எழுப்பினார்.

(ஆதாரம்: 1. https://bit.ly/3jwxt3U, 2. https://bit.ly/3jyOryM (2021 ஜுலை 07 ஆம் திகதி - ஹன்சாட் அறிக்கை 1667-1680 நிரல்கள்)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கூறுகையில், சிரச குழுமத்திற்கு வழங்கப்பட்ட ஒலி, ஒளிபரப்பு உரிமங்களை மீளப்பெற்று அதை முற்றாக மூடிவிடுவதற்கு இரகசியத் திட்டம் தீட்டப்படுகிறது எனவும் இதற்காக அரசாங்கம் சில முக்கிய சட்ட நிபுணர்களோடு ஆலோசனை நடத்தியுள்ளதெனத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் சிரச அலுவலகத்துக்கு இன்னுமொரு தடவை கிளேமோர் குண்டுவைக்கும் திட்டம் அரசுக்கு உண்டோ எனவும் இதற்கு அரசு பதிலளிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். மேலும் எதிர்க்கட்சித் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபை நடுவில் வந்து தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.

இதனால் சபையில் ஏற்பட்ட அமளிதுமளியைத் தொடர்ந்து எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கேள்விக்கு அமைச்சர் பந்துல குணவர்த்தன பதிலளித்தபோது சிரச ஊடக உரிமத்தை மீளப்பெறுதற்கான திட்டமெதுவும் கோதாபய தலைமையிலான அரசாங்கத்திடமில்லை எனத் தெரிவித்தார். பின்னர், ஜேவிபி தலைவர் அனுரகுமார திசாநாயக்கவும் சஜித் பிரேமதாசவின் கருத்தை ஆதரித்து பேசினார். அவர் மேலும் தெரிவித்ததாவது "இன்று எங்கள் நாட்டை நிர்வகிப்பது அடக்குமுறை கையுடன் கொண்ட கருப்பு வரலாறு கொண்ட தலைவரே ஆகும்".அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த காலத்தில் பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு எதிராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த அடக்குமுறை நடவடிக்கைகள் பற்றி தொடர்ந்து பேசினார். (ஆதாரம்: https://www.youtube.com/watch?v=26rFmYl2xks&t=697s)

பிபிசி சந்தேசய இணையதளம் இது குறித்து வெகுசன ஊடக அமைச்சரிடம் கேட்டபோது, மின்னணு ஊடக அலைவரிசைகள் தொடர்பில் மக்களுக்கு உரிமை இருந்தாலும், இலங்கையில் உள்ள ஊடக நிறுவனங்கள் முதலாளிகளின் தேவைகளுக்கு ஏற்ப நிர்வகிக்கப்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

"ஒழுக்கவியல் விழுமியங்கள் இருக்கும் வரை அது நல்லது, ஆனால் அது தொலைந்து போகும் போது, நாங்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் பேச வேண்டும். இது ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தைப் பற்றியது அல்ல, ஆனாலும் நாங்கள் இது தொடர்பில் தேடி அறிந்துக்கொண்டு தான் இருக்கின்றோம் " என அமைச்சர் தெரவித்துள்ளார்

(மூலாதாரம்:https://www.bbc.com/sinhala/sri-lanka-57758910)

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்

**ஊடக சுதந்திரம் தொடர்பான சட்டரீதியான கட்டுப்பாடுகள் மற்றும் சட்டவிதிகள் பகுதிக்கூறுக்குள் உள்ளடங்கும் 06 நிகழ்வுகள் ஜூலை மாதத்திற்குள் அடையாளம் காணப்பட்டன. பொதுமக்களின் ஒன்றுகூடும் உரிமை மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான ஆயுதமாக தனிமைப்படுத்தல் விதிமுறைகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதாக பல சம்பவங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன, மேலும் கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான போக்குகளாக இந்த நிகழ்வுகள் கருத்தில் கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். "ஊடகவியலாளர்களின் மூலாதாரங்களின் பாதுகாப்பிற்கு மதிப்பளித்தல் மற்றும் உறுதியளித்தல்" என்ற விடயத்தை நேரடியாக பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு நிகழ்வும் காணப்பட்டது, இது ஊடகச் சுதந்திரத்தின் சட்ட விதிமுறைகளின் கீழ் காணப்படும் பகுதிக்கூறுகளில் ஒன்றாகும். கடந்த கால அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள நிகழ்வுகள் தொடர்பான இரு முன்னேற்றங்களும் அடையாளம் காணப்பட்டன.**

**அட்டவணை 04 – 2021 ஜூலை: சட்ட விதிமுறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்– 06 நிகழ்வுகள**

| இலக்கம் | நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 03 |
| 02 | ஊடகவியலாளர்களின் மூலாதாரங்களின் பாதுகாப்பிற்கு மதிப்பளித்தல் | 01 |
| 03 | ஊடகங்கள் மீதான சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 02 |
| | **மொத்தம்** | **06** |

1. பொதுக் கூட்டங்கள் மற்றும் போராட்டங்கள் போன்ற நடவடிக்கைகள் மறு அறிவித்தல் வரை நடத்தப்படக் கூடாது என்ற சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் வேண்டுகோளின் பேரில் பொலிஸ் தலைமையகம் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டமை மற்றும் பல்வேறு மக்கள் போராட்டங்களின் போது தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் பல சமூக ஆர்வலர்கள் கைது செய்யப்பட்டமை.

பொலிஸ் தலைமையகம் 06-07-2021 திகதி அன்று "நாட்டின் சுகாதார பாதுகாப்பை சவாலுக்கு உட்படுத்தும் பல்வேறு போராட்டங்கள்" என்ற தலைப்பில் ஒரு ஊடக அறிக்கையை

வெளியிட்டது. "பொதுக்கூட்டங்கள் மற்றும் பொதுமக்கள் கூடும் போராட்டங்கள் போன்ற செயல்பாடுகளால் கொவிட் தொற்றுநோய் பரவும் அபாயம் அதிகம் காணப்படுவதனால், இதுபோன்ற ஆர்ப்பாட்டங்கள் மீள் அறிவிக்கும் வரை மேற்கொள்ள வேண்டாம்" என சுகாதார பணிப்பாளர் நாயகம் பொலிஸ் மா அதிபருக்கு தெரிவித்ததாக குறித்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்கண்ட தனிமைப்படுத்தல் உத்தரவின்படி, இலங்கை காவல்துறை செயல்படும் என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கை வெளியிடப்பட்டு அடுத்த நாள் முதலே பொலிஸ் அதிகாரிகள் வெவ்வேறு பிரதேசங்களில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்ட நபர்களை தனிமைப்படுத்தல் சட்டம் மீறப்படுதல் என்ற குற்றச்சாட்டில் கைது செய்ய ஆரம்பித்தனர். ஜூலை 07-08, இரு தினங்களில் மாத்திரம் பொரலந்த, முத்துராஜவெல (போபிட்டிய), களுத்துறை, கொழும்பு பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் பாராளுமன்ற சுற்றுவட்ட பாதை போன்ற, இடங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்ட 50 க்கும் மேற்பட்ட ஆர்வலர்கள் கைது செய்யப்பட்டனர். ஜூலை 8 ஆம் திகதி அன்று பாராளுமன்ற சுற்றுவட்ட பாதையில் நடைபெற்ற போராட்ட பேரணியின் போது கைது செய்யப்பட்ட ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் உட்பட 31 பேரை 14 நாள் தனிமைப்படுத்தல் மேற்கொள்ளுமாறு காவல்துறையினரால் நீதிமன்றத்திற்கு கோரிக்கை விடுத்த போதிலும் நீதிமன்றம் குறித்த கோரிக்கையை நிராகரித்தது. பின்னர் அவர்கள் நீதிமன்ற வளாகத்தில் வைத்தே வலுக்கட்டாயமாக மீண்டும் பொலிஸ் காவலில் எடுத்து தனிமைப்படுத்தப்பட்டனர்.

காவல்துறையினறின், இந்த நடவடிக்கையை , கருத்து சுதந்திரம் உட்பட ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் தரப்பினர் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.மேலும் ஜூலை 09 ஆம் திகதி இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பொலிஸ் மா அதிபரிற்கு திறந்த கடிதம் ஒன்றை அனுப்பி வலியுறுத்திய விடயமாவது,தனிமைப்படுத்தல் சட்டத்தினை அடிப்படை உரிமைகளை மீறும் கருவியாக பயன்படுத்த வேண்டாம் என்பதாக கோரிக்கை விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

கொவிட் 19 தனிமைப்படுத்தல் வழிகாட்டுதல் என்ற போர்வையில் கீழ் நாட்டில் நடைபெறும் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் குறித்து சுதந்திர ஊடக இயக்கம் உள்ளிட்ட ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு தமது எதிர்ப்பு மற்றும் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி ஜூலை 12 ஆம் திகதி அன்று இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் கேட்போர் கூடத்தில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்தது. மேலும் ஊடக அமைப்புகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து மொத்தம் 45 அமைப்புகளின் கையெழுத்திட்ட பொது அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டது.

2. **மனித உரிமைகள் மீறல்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட முந்தைய ஆணைக்குழு அல்லது ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை பரிசீலனை செய்து அறிக்கை அளிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையின் மூலம் "பயங்கரவாத தடுப்பு சட்டத்தை ரத்து செய்யக்கூடாது" என்று பரிந்துரைத்துள்ளமை.**

மனித உரிமைகள் மீறப்படுதல் குற்றச்சாட்டில் பயங்கரவாத தடுப்பு சட்டத்தினை (PTA) ரத்துச் செய்வதற்கான வேண்டுகோளை தமது ஆணைக்குழு நிராகரிப்பதாக "மனித உரிமைகள் மீறல்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட முந்தைய ஆணைக்குழு மற்றும் குழுக்களின் முடிவுகளை மதிப்பிடுவதற்கும் மற்றும் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு" (The Presidential Commission of Inquiry for Appraisal of the Findings of Previous Commissions and Committees on Human Rights) தமது இடைக்கால அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.இந்த இடைக்கால அறிக்கை ஜூலை 20 ஆம் திகதி அன்று ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டது.

ஐக்கிய இராச்சியம் உள்ளிட்ட பிற நாடுகளில் காணப்படும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டங்களுக்கு ஏற்ப பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும், அச் செயற்பாடானது ஜனநாயக ரீதியாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என்றும் மேலும் குறித்த இடைக்கால அறிக்கையில் மூன்று முக்கிய பரிந்துரைகளை முன்வைத்துள்ளதாகவும் குறித்த அறிக்கை வலியுறுத்துகிறது என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. சட்டத்தின் 9ஆம் உறுப்புரிமைக்கு அமைய, தடுப்புக்காவல் உத்தரவுகளை நிறைவேற்றும் போது குறைந்தபட்சம் 3 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களை குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்பட்டு வழக்கு விசாரணை நிறைவேற்றப்படல்,11 வது உறுப்புரிமைக்கு அமைய தடுப்புக்காவலில் இருக்கும் நபரை சிறையில் அடைப்பதற்கு பதிலாக விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் அவர்களின் வீடுகளிலோ அல்லது அவர்களது கிராமங்களிலோ தடுத்துவைத்தல்,13வது உறுப்புரிமைக்கு அமைய ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்க குறைந்தபட்சம் மூன்றுபேர் கொண்ட அனைத்து இனத்தவர்களையும் பிரதிநிதித்துவமளிக்கின்ற ஆலோசனை குழுவொன்று அமைத்தல் போன்றவைகளே மேலே குறிப்பிட்ட மூன்று பரிந்துரைகளாகும். ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை அடுத்த ஆறு மாதங்களில் கையளிக்கப்பட உள்ளது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் ஊடகவியலாளர்கள்,எழுத்தாளர்கள் மற்றும் பல்வேறு துறைகளை பிரதிநிதிபடுத்தும் ஆர்வலர்கள் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைத்திருக்கும் நடைமுறையானது இன்று வரை நடைபெற்றுக்கொண்டிருப்பதுடன் மேலும் அந்த சட்டத்தின் போர்வையில் அண்மைகாலமாகப் பல்வேறு விதமான அடக்குமுறைகள் மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் குறித்த பல உள்நாட்டு மற்றும் சர்வதேச அமைப்புகளின் நிலைப்பாடு இந்த சட்டம் முழுவதுமாக ஒழிக்கப்பட வேண்டும் என்பதே ஆகும்.

3. **நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான தண்டனை ஒழுங்குபடுத்துவதில் அல்லது தண்டனை விதிக்கப்படுவதில் சில நீதிமன்றங்களின் அதிகாரங்களை வரையறுக்கவும் மற்றும் அது தொடர்பான நீதிமன்ற நடைமுறைகளை ஒழுங்குபடுத்தும் நோக்கில் சட்டவரைவொன்றை சமர்ப்பித்தல், அந்த சட்டவரைவானது பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் தனிப்பட்ட பிரேரணையாகும்.**

மேற்கண்ட வரைவு ஜூலை 9 ஆம் திகதி அன்று சுற்றுநிருபத்தில் வெளியிடப்பட்டது. உள்நாட்டு மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் நீண்டகாலமாக இலங்கையில் நீதிமன்ற அவமதிப்புக்கான தெளிவான வரையறை அல்லது முறையான நடைமுறை இல்லாத பிரச்சனையை சுட்டிக்காட்டியுள்ளன மேலும் இது கருத்து சுதந்திரம் மற்றும் ஊடக சுதந்திரத்திற்கு தடையாக உள்ளது. 2008 ஆம் ஆண்டு இதற்கான சட்ட மசோதாவை இலங்கை சட்ட ஆணையம் உருவாக்கியது இருந்தபோதிலும் அது அமைச்சரவையால் அங்கீகரிக்கப்படவில்லை.

மார்ச் 2021 இல், இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் , இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் ஊடாக , நீதித்துறை அமைச்சருக்கு ஒரு கடிதம் அனுப்பியது, அந்த கடிதத்தில் நீதிமன்ற அவமதிப்பை முறையாக வரையறுக்கும் ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று கோரியது. இந்த பரிந்துரைகள், 2003 ஆம் ஆண்டு ஜனாதிபதி சட்டத்தரணி

லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையில் நடைபெற்ற பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் முன்வைத்த முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டது. இலங்கை மனித உரிமைகள் ஆணையத்தின் ஆலோசனைக் குழுவால் 2006 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வரைவையும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் நீதி அமைச்சருக்கு வழங்கியது. (ஆதாரம்: http://www.fmmsrilanka.lk/wpcontent/uploads/2021/04/MFRMD_Mar_Sin.pdf)

4. **ஊடகவியலாளர்கள் தகவல் அறிக்கியிடுவதில் மட்டும் நின்றுவிடாமல், பாரதூரமான சம்பவங்கள் குறித்த தகவல்களை சம்பந்தப்பட்ட சட்டப் பிரிவுகளுக்கு வழங்க வேண்டும் என்று வெகுசன ஊடக அமைச்சரினால் தெரிவிக்கப்பட்ட கருத்து.**

வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் அமைச்சரவை செய்தித் தொடர்பாளர் கெஹெலிய ரம்புக்வெல்ல ஜூலை 19 ஆம் திகதி அன்று ஸ்வர்ணவாஹினியின் "இர-ஹறி கெலின்" கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கருத்து தெரிவிக்கையில், ஊடகவியலாளர்களின் பங்கு சம்பவங்கள் தொடர்பில் ஊடக செய்திகளாக தங்கள் ஊடகங்கள் மூலம் தெரிவிப்பது மட்டுமல்ல,அவர்களிடம் காணப்படும் தகவல்கள் அனைத்தையும் சம்பந்தப்பட்ட சட்ட பிரிவுக்கு பெற்றுக்கொடுப்பதும் ஊடகவியலாளர்களின் பொறுப்பாகும் என குறிப்பிட்டார்.அவர் மேலும் தெரிவிக்கையில் அப்படி தகவல்களை உரிய சட்டபிரிவுக்கு வழங்காமல் இருப்பது சாட்சியங்களை மறைக்கும் குற்றத்திற்கு உட்படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டார்(ஆதாரம்: https://www.youtube.com/watch?v=UnUzpDmNTOM)

இது ஊடகவியலாளர்களின் மூலாதாரங்களின் பாதுகாப்பிற்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் கருத்தாகும். மேலும் ஊடகவியலாளர்களின் பணிபங்கின் தவறான விளக்கம் ஆகும். நிகழ்ச்சியில் வர்ணனையாளர்களாக பங்கேற்ற ஊடகவியலாளர்கள் மூலாதாரங்கள் தொடர்பான பாதுகாப்பு பிரச்சினை தொடர்பில் குரல் எழுப்பிய போதிலும் அது போதுமான கலந்துரையாடலுக்கு வழிவகுக்கும் கேள்விகளாக வித்திடவில்லை என்பது கவனிக்கப்பட்டது. இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவரான சனத் பாலசூரிய, தனது பேஸ்புக் கணக்கில் சிறந்த பதிலை பதிவிட்டிருந்தார், இந்த பதிவானது ஊடகவியலாளர்களிடையே ஒரு சிறந்த உரையாடலைத் துவக்கியது. (ஆதாரம்: https://mobile.facebook.com/story.php?story_fbid=1022708686778 1583&id=1352747725)

## கடந்தகால நிகழ்வுகளின் வளர்ச்சிப்போக்குகள்

5. **பேஸ்புக்கில் பதிவிட்டதற்காக கைது செய்யப்பட்ட பத்திரிகையாளர் கோகில தாசனை ஏழு மாதங்களுக்கும் மேலாக தடுப்புக் காவலில் வைத்திருப்பது குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) விசாரணையைத் தொடங்கியமை.**

இலங்கை ஊடகவியலாளர் கோகில தாசன் முகப்புத்தகத்தில் இட்ட பதிவு ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகளை ஊக்குவித்ததாக குற்றம்சாற்றி ஏழு மாதங்களுக்கும் மேலாக தடுப்புக்காவலில் வைத்திருப்பது குறித்து வழக்கறிஞர் சஞ்சய வில்சன் ஜயசேகர ஜூலை 12 ஆம் திகதி அன்று இலங்கை மனித உரிமைகள் ஆணையத்தில் புகார் அளித்துள்ளார்.

மனித உரிமைகள் ஆணையகம் அது தொடர்பில் விசாரணை தொடரப்பட்ட நிலையில் ஜூலை 30 ஆம் திகதி வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காக அழைப்புவிடுக்கப்பட்டிருந்தது. அங்கு கோகிலதாசனை கைது செய்தமை தொடர்பில் உரிய சாட்சிகளை உறுதிப்படுத்த பொலிஸ் அதிகாரிகள் தவறிவிட்டதாகவும் , கைதுக்கான உரிய காரணத்தை முன்வைப்பதற்கு ஆணையகம் இரு வாரங்கள் அவகாசம் கொடுத்திருப்பதாகவும் வழக்கறிஞர் வில்சன் ஜயசேன குறிப்பிட்டார். (ஆதாரம்: https://twitter.com/sanjayawilson/status/1415499644453277696)

6. **எழுத்தாளர் சக்திக சத்குமார தனது முகநூலில் வெளியிட்ட சிறுகதையின் காரணமாக கைது செய்யப்பட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு மீதான விசாரணை ஆரம்பிக்கப்பட்டமை.**

முகப்புத்தகத்தில் பதிவிட்ட "அர்த" என்ற சிறுகதையின் மூலம் மதத்தை நிந்தனை செய்த குற்றச்சாட்டில், பொல்கஹவெல காவல்துறையால் ஐசிசிபிஆர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதை எதிர்த்து எழுத்தாளர் சக்திக சத்குமார தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு (SCFR 167/2019) ஜூலை 15 ஆம் திகதி அன்று உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொண்டதுடன் வழக்கை அக்டோபர் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்த மனுவில் பொல்கஹாவெல பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி,முன்னாள் பொலிஸ் மா அதிபர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சக்திக சத்குமார ஏப்ரல் 1, 2019 ஆம் திகதி அன்று கைது செய்யப்பட்டு, ஆகஸ்ட் 08, 2019 திகதி அன்று பிணையில் விடுவிக்கப்பட்டார். அவர் 130 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். அவர்மீது சட்டநடவடிக்கை எடுக்க எந்த காரணமும் இல்லை என்று சட்டமா அதிபர் பொல்கஹவெல நீதவான் நீதிமன்றத்திற்கு தகவல் தெரிவித்ததை அடுத்து, பிப்ரவரி 09, 2020 அன்று சக்திக சத்குமார வழக்கில் இருந்து முற்றாக விடுவிக்கப்பட்டார்.

## கட்டமைப்புரீதியான விதிமுறைகள்

**கட்டமைப்புரீதியான விதிமுறைகள் "ஊடக சுதந்திரத்தின் மற்றொரு முக்கிய அங்கமாகும். ஊடக தொகுதியின் முழு கட்டமைப்பிற்கும் மற்றும் ஊடக சுதந்திரத்தை இயக்கப்படும் ஒட்டுமொத்த சூழலுக்கும் பொருந்தக்கூடிய 06 சாத்தியமான குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது. அவற்றில் ஜூலை மாதத்தில் இரண்டு சம்பவங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன அவை "கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரம் மீதான ஆதரவு" என்ற பிரிவின் கீழ் உள்ளடக்கப்படுகின்றன.**

**அட்டவணை 05–2021 ஜூலை கட்டமைப்புரீதியான விதிமுறைகள் –03 நிகழ்வுகள்**

| இலக்கம் | நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரம் மீதான ஆதரவு | 03 |
| | **மொத்தம்** | **03** |

1. சர்வதேச ஊடகவியலாளர்களின் கூட்டமைப்பு (IFJ) ஊடக நிறுவனங்களில் நடைபெறும் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியமை

   சர்வதேச ஊடகவியலாளர்களின் கூட்டமைப்பு (IFJ) ,அதன் இலங்கை இணை உறுப்பினர்களுடன் இணைந்து, ஊடக நிறுவனங்களில் நடைபெறும் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு இலங்கை அரசை கேட்டுக் கொண்டுள்ளது. சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம் மற்றும் ஊடக தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம் ஆகியவை IFJ இன் இலங்கை இணை உறுப்பினர்கள் ஆவர்.

   ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, ஜூன் மாதம் பல ஊடகவியலாளர்கள் ட்விட்டரில் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதன் பிறகு ஊடகங்களில் ஒரு விவாதம் நடந்ததாகவும், இது குறித்து விசாரணை நடத்துவதில் கவனம் செலுத்தப்படும் என்றும் கூறினார். பின்னர் சம்பந்தப்பட்ட பத்திரிகையாளர்களிடம் முறையான முறையீடு இல்லாமல் விசாரணை நடத்த முடியாது என்று அமைச்சர் கூறினார். இதன் காரணமாக தொடர்புடைய பாலியல் துன்புறுத்தல் சம்பவங்கள் மறைக்கப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

2. ஊடக சுதந்திரம் குறித்த சர்வதேச அமைப்பான எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பு (RSF) தனது "பத்திரிகை சுதந்திரத்தை வேட்டையாடுபவர்கள்" 37 பேர்கள் கொண்ட பட்டியலில் இலங்கை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவையும் இணைத்துக்கொண்டுள்ளது.

   எல்லைகளற்ற நிருபர்கள் (RSF) ஐந்தாண்டுக்கு ஒருமுறை வெளியிடப்படும் 'பத்திரிகை சுதந்திரத்தை வேட்டையாடுபவர்கள்' (Predators of press freedom) புகைப்படத்தின் புதிய வெளியீடு இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் புகைப்படம் உட்பட ஜூலை மாதம் வெளியிடப்பட்டது. இந்த புகைப்படத்தில் ஊடக சுதந்திரத்திற்கு பாரிய அச்சுறுத்தல் விடுக்கும் உலக அரச தலைவர்களின் 37 பேர் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் எகிப்து, பெலாரஸ், ஈரான், சிரியா, ஹாங்காங், நிகரகுவா, தஜிகிஸ்தான், இலங்கை, துர்க்மெனிஸ்தான், பஹ்ரைன், கம்போடியா, அஜர்பைஜான், பாகிஸ்தான், ஜிபுட்,எரித்ரியா பிரசில், வட கொரியா, சிங்கப்பூர், கியூபா, மியான்மார், சவுதி அரேபியா, இந்தியா, வெனிசுலா, வியட்நாம், கேமரூன், ருவாண்டா, தாய்லாந்து, ரஷ்யா, துருக்கி, பிலிப்பைன்ஸ், தெற்கு சூடான், பங்களாதேஷ், ஈக்வடோரியல் கினியா, ஹங்கேரி, சீனா, உகாண்டா போன்ற நாடுகளின் அரச தலைவர்கள் இந்த பத்திரிகை சுதந்திரத்தை வேட்டையாடுபவர்களின் பட்டியலில் உள்ளனர். (ஆதாரம்: https://rsf.org/en/news/rsfs-2021-press-freedom-predators-gallery-old-tyrants-two-women-and-european)

   இந்த புகைப்படத்துடன் வெளியிடப்பட்ட அறிக்கையில் அந்தந்த நாட்டு தலைவர்களின் விவரம் வெவ்வேறாக காணப்படுகின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பற்றிய குறிப்பில், "2019 நவம்பரில் கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது, இலங்கையின் சமீபத்திய வரலாற்றில் இருண்ட மணிநேரத்திற்கு திரும்பியது என்று கூறுகிறது. ஊடகங்களுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையின்மை 2005-2015 முதல் தொடர்ந்து செயல்பட்டு வருவதை நினைவுபடுத்தும் இவ்வறிக்கை, RSF மதிப்பீடுகளின்படி, இலங்கை ஜனாதிபதி பாதுகாப்பு செயலாளராக இருந்தபோது குறைந்தது 14 பத்திரிகையாளர்களை கொன்றமை அல்லது காணாமல் ஆக்கப்பட்டனர் என்றும், மேலும் 20 ஊடகவியலாளர்கள் சித்திரவதை செய்யப்பட்டு அல்லது மரண அச்சுறுத்தல்விடுக்கப்பட்டதன் பின்னர் அவர்கள் நாட்டை விட்டு சென்றுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. உலக பத்திரிகை சுதந்திர அட்டவணையில் 180 நாடுகளில் இலங்கை 127 வது இடத்தில் உள்ளது என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

3. மனித உரிமைகள் வழக்கறிஞர் ஹிஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் தமிழ் மொழி ஆசிரியரும் கவிஞருமான அஹ்னாப் ஜசீமை கைது செய்து அநியாயமாக தடுத்து வைத்திருப்பதை கண்டித்து இலங்கை பல்கலைக்கழக சமூகத்தின் 96 உறுப்பினர்கள் கூட்டு அறிக்கை வெளியிட்டுள்ளமை.

   பல்கலைக்கழக பேராசிரியர்கள் தலைமையிலான குழாம், நீதியை நிர்வகிக்கும் நிறுவனங்களின் அமைப்பில் நம்பிக்கையை உருவாக்க அரசு பணிபுரிய வேண்டும் என்றும், தன்னிச்சையாக தடுத்து வைக்கப்பட்டுள்ள ஹிஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் அஹ்னாஃப் ஜசீம் ஆகியோரை விடுவிப்பது மிக முக்கியமானது என்றும் அவர்கள் வெளியிட்ட கூட்டு அறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

   இத்தகைய ஜனநாயக விரோத செயல்களை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும், பயங்கரவாதத் தடைச் சட்டம் உள்ளிட்ட அடக்குமுறைச் சட்டங்களை ரத்து செய்ய வேண்டும் என்றும் அரசாங்கத்தை கேட்டுக்கொள்ளும் குறித்த குழாம் , இதுபோன்ற ஜனநாயக விரோதச் செயல்களை உடனடியாகத் தடுக்க பொதுமக்கள் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவர்கள் மேலும் வலியுறுத்தியுள்ளனர்.

   (ஆதாரம்:https://newsin.asia/96-top-lankan-academics-appeal-for-the-release-of-muslim-lawyer-and-poet)

**அட்டவணை: 06 ஊடக சுதந்திரம்: 2021 ஜனவரி முதல் ஜூலை வரை சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள பகுதிக்கூறுகள், தலைப்புக்கள் | 2021 ஜனவரி– ஜூன் | | 2021 ஜூலை |
|---|---|---|---|
| | புதிய நிகழ்வுகள் | முன்னைய நிகழ்வுகளின் வளர்ச்சிப்போக்கு | |
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 24 | | 04 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 27 | 02 | 06 |
| ஊடக சுயாதீனத்துவம் | 01 | | 01 |
| ஊடக சுதந்திரம் தொடர்பான புதிய ,முக்கிய போக்குகள் | 01 | | - |
| கட்டமைப்பு ரீதியான நிபந்தனை | 03 | | 03 |

[2021 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை ஜனவரி - ஜூன் வரை இங்கு பார்வையிடவும்]

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனாங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாகவே காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


## Free Media Movement

Convener | Seetha Ranjanee +94 77 731 2460 | Secretary | Lasantha De Silva +94 71 166 7938
Treasurer | Thaha Muzammil +94 77 374 1026
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com | Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka | #FMM25


Layout: iridiumcreations.com